செய்தி வெளியீடு எண்: 701 நாள் : 28.12.2015

# செய்தி வெளியீடு

''தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று''

என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க ராமேஸ்வரத்தில் ஏழை குடும்பத்தில் பிறந்த திரு அப்துல் கலாம் அவர்கள் கடின உழைப்பாலும், ஒருமுக சிந்தனையாலும், விடாமுயற்சியாலும் சிறந்த விஞ்ஞானியாக திகழ்ந்ததோடு மட்டுமல்லாமல் அனைத்து தரப்பு மக்களாலும் அன்பு பாராட்டப்பட்ட இந்திய நாட்டின் குடியரசுத் தலைவராகவும், இந்தியாவின் மிக உயர் விருதான பாரத ரத்னா விருதை பெற்றவராகவும், அனைத்துத் தரப்பு மக்களாலும் போற்றப்படும் ஒரு புகழ்ப் பெற்ற திருமகனாகவும் விளங்கியவர் ஆவார்.

அவரது திடீர் மறைவினை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மிகுந்த வேதனையுற்றுது மட்டுமின்றி, திரு அப்துல் கலாம் அவர்களது நல்லடக்கம் அவரது சொந்த ஊரான ராமேஸ்வரத்தில் நடைபெற வேண்டும் என அவரது குடும்பத்தினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, உடனடியாக அரசு இடத்தை ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள். அதன்படி அன்னாராது நல்லடக்கம் ராமேஸ்வரத்தில் 30.7.2015 அன்று நன்முறையில் நடைபெற்றது.

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா திரு. ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் 2020-ஆம் ஆண்டுக்குள் இந்தியா வல்லரசாக உருவாக

வேண்டும் எனக் கனவுக் கண்டார். மாணாக்கர்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரால் தான் அந்த கனவை நனவாக்க முடியும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். மேலும் அவர் மாணவர்களிடையே தன்னம்பிக்கை மிகவும் அவசியம் என்பதால், மாணாக்கர்களை கனவு காணுங்கள், அந்தக் கனவு உறக்கத்தில் வரும் கனவாக இருக்கக்கூடாது உறக்கத்தை விரட்டும் கனவாக இருக்கவேண்டும் என தன்னம்பிக்கை வளர்க்கும் விதமாக எடுத்துரைத்தார். இளையத் தலைமுறையினர் மற்றும் மாணாக்கர்கள் உயர்நிலை அடைவதற்கு உந்து சக்தியாக விளங்கிய திரு அப்துல் கலாம் அவர்களது பிறந்த தினமான அக்டோபர் மாதம் 15-ஆம் நாள் 'இளைஞர் எழுச்சி நாள்' என தமிழக அரசின் சார்பில் ஆண்டு தோறும் கடைப்பிடிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அவ்வாறே **15.10.2015** தமிழக அரசின் சார்பில் இளைஞர் எழுச்சி நாளாக கடைபிடிக்கப்பட்டது.

மேலும் அன்னாரது புகழுக்கு மகுடம் சேர்க்கும் விதமாக, அன்னாரது நினைவைப் போற்றும் விதமாக 'டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது' என்ற ஒரு விருதினை உருவாக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள். இந்த ஆண்டு இந்த விருது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் திட்ட அலுவலராக பணியாற்றும் திருமதி என்.வளர்மதி என்பவருக்கு வழங்கப்பட்டது.

கடந்த 7.8.2015 அன்று பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை சந்தித்த போது மறைந்த டாக்டர் APJ அப்துல் கலாம் அவர்களை நல்லடக்கம் செய்த இடத்தில் மத்திய அரசின் சார்பில் தேசிய நினைவகம் அமைக்க உள்ளதாகவும், அதற்காக தமிழ்நாடு அரசு தேவையான நிலத்தினை வழங்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். அதனை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தேவையான நிலத்தினை வழங்க ஆணை பிறப்பித்தார்கள். 13.8.2015 நாளிட்ட கடிதத்தில் மைய அரசின் நகர்புற வளர்ச்சித் துறை செயலர் நினைவகம் அமைக்கத் தேவையான நிலத்தினை ஒதுக்கீடு செய்ய கடிதம் எழுதினார். இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் வட்டம், பாம்பன் குரூப் கிராமம், புல எண்149/1 இல் 0.55.0 ஹெக்டேர் (1.36 ஏக்கர்) நிலம் அரசாணை (நிலை) எண் 324, வருவாய்த்துறை, நாள் 02.09.2015 இன்படி நிலக்கிரயமின்றி மத்திய அரசுக்கு நிலமாற்றம் செய்து உத்தரவு வழங்கப்பட்டது.

15.10.2015 அன்று மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. APJ அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பாரதப் பிரதமர் அவர்கள் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. APJ அப்துல் கலாம் அவர்களுக்கு மத்திய அரசு இராமேஸ்வரத்தில் நினைவகம் அமைக்கும் என்று அறிவித்தார்கள். மைய அரசு நினைவகம் அமைப்பது குறித்து ஒரு உயர்நிலைக் குழுவை அமைத்துள்ளது. இக்குழுவின் முதல் கூட்டம் 6.11.2015 அன்று

நடைபெற்றது. இக்கூட்டத்தில் மத்திய நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு வெங்கையா நாயுடு அவர்கள் டாக்டர் திரு. APJ அப்துல் கலாம் நினைவகம் அமைப்பதற்கு தமிழக அரசு நிலம் ஒதுக்கீடு செய்ததற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

தமிழக அரசு ஒதுக்கீடு செய்த நிலத்தில் வேலி அமைக்க மத்திய பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

*****

**வெளியீடு:- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.**
**நாள்:- 28.12.2015.**